DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : ஆறுமுகம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.09.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th September 2025.

**எதிரி ஆஜர் இல்லை. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

முதல்விசாரணை:

நான் தற்போது சங்கரன்கோவில் காந்திநகரில் குடியிருந்து வருகிறேன். நான் பெயின்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 வருடத்திற்கு முன்பு எனது தெருவில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். **அதில் எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில்உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. **(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 14.02.2015 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவ இடட்ததில் வைத்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், பெருமாள் என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**